# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்**, இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 132/ந/2023, நாள் 10.12.2025

| | | |
|---|---|---|
| திரு. P. ராயன்,<br>சேரம்பாடி, நீலகிரி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>நெல்லியாளம் நகராட்சி, நீலகிரி மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

நீலகிரி மாவட்டம், சேரம்பாடி, சங்கம், கதவு எண். 11/375 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. ராயன் என்பவரின் 08.05.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.05.2023 அன்று பெறப்பட்டு, 132/ந/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், சேரம்பாடி, சங்கம், கதவு எண். 11/375 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. ராயன் என்பவர் தனது 08.05.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மற்றும் எனது குடும்பத்தார் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள, நகராட்சிகள், பேரூராட்சிகள், பஞ்சாயத்து மற்றும் மாநில அளவிலான டெண்டர்களை எடுத்து நல்ல முறையில் பணிகளை செய்து வருகிறோம். அதில் ஒரு நகராட்சி தான் நெல்லியாளம் நகராட்சி ஆகும். நானும் எனது குடும்ப உறுப்பினர்கள் அதாவது, எனது அண்ணன் திரு. P.Hamsa (இவர் கடந்த 04.05.2021 ஆம் தேதியில் மறைந்து விட்டார்) அவர் இறப்பதற்கு முன்பு பல டெண்டர் பணிகளை நெல்லியாளம் நகராட்சியில் தொடர்ந்து எடுத்து வெற்றிகரமாக முடித்து கொடுத்துள்ளார் மற்றும் திரு. P. Ashraf, திரு. P. Rahim, திரு. P. Noushad, திரு. P.R. Rasheed, திரு. P. Salem மற்றும் திரு. P. Rayin Constructions Company Pvt. Ltd., நானும் மேலே குறிப்பிட்டுள்ள எனது குடும்பத்ினரும் நெல்லியாளம் நகராட்சியின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் (Registered Contractors of Nelliyalam Municipality) ஆவர்.

மேற்படி நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் பல ஆண்டுகளாக நெல்லியாளம் நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களாக டெண்டர் பணிகளை தொடர்ந்து சரிவர செய்து வருகிறோம். மேலும் சட்ட திட்டங்கள் மற்றும் டெண்டர் நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒவ்வொரு டெண்டர்களையும் நாங்கள் சட்டப்படி எடுத்து வருகிறோம். அதாவது ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் டெண்டரில் பங்கேற்க Earnest Money Deposit எனப்படும் EMD தொகையை நெல்லியாளம் நகராட்சிக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்திய EMD தொகையை நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம் டெண்டர் முடிந்தவுடன் அந்தந்த ஒப்பந்ததாரர்களின் தொகையை அவரவரிடமே திருப்பி கொடுத்துவிட வேண்டும். மேற்படி ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட EMD தொகையை வேறு எந்த காரணத்திற்காகவும் பயன்படுத்தவோ, செலவிடவோ நகராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லை.

மேற்படி தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு உடனடியாகவும் மற்றும் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு Preference Security Deposit என சொல்லக்கூடிய செயல்திறன் பாதுகாப்பு தொகையை செலுத்தியவுடன், உடனடியாக நகராட்சி நிர்வாகம் EMD தொகையை அந்தந்த ஒப்பந்ததாரர்களிடம் திருப்பி செலுத்திவிடவேண்டும். நான் மேலே கூறியது போல வேறு

எந்த காரணத்திற்காகவும் EMD தொகையை பயன்படுத்தவோ, செலவிடவோ நகராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லை.

அதேபோல் ஒவ்வொரு வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர்களால் செலுத்தபடக்கூடிய Further Security Deposit (FSD) தொகையையும் நகராட்சி நிர்வாகம் EMD போல அந்தந்த ஒப்பந்ததாரர்களுக்கே திருப்பி செலுத்திவிடவேண்டும். இத்தொகையை நகராட்சி நிர்வாகம் வேறு எந்த காரணத்திற்காகவும், FSD தொகையை பயன்படுத்தவோ, செலவிடவோ நகராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லை.

இப்படியிருக்க, நானும் எனது குடும்பத்தினரும் ஒவ்வொரு டெண்டருக்கும் தவறாமல் டெண்டர் விதிமுறையில் EMD மற்றும் FSD தொகையை செலுத்தி வருகிறோம். கடந்த 2012–ஆம் ஆண்டு வரை நாங்கள் செலுத்திய EMD மற்றும் FSD தொகையினை நகராட்சி நிர்வாகம் எங்களுக்கு சரிவர திருப்பி செலுத்திவிட்டது. ஆனால் கடந்த 2012–ஆம் ஆண்டுக்கு பிறகு எங்களுக்கு EMD/ FSD தொகையினை நகராட்சி நிர்வாகம் திருப்பி செலுத்தவில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் வாய்வழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் பல முறை நெல்லியாளம் நகராட்சியில் முறையிட்டும் எந்த பலனும் இல்லை. நாங்கள் முறையிடும் ஒவ்வொரு முறையும் நகராட்சி நிர்வாகம் உங்கள் EMD/ FSD தொகை எங்களிடம் தான் உள்ளது. Internal Audit முடிந்தவுடன் அதை நாங்கள் திருப்பி செலுத்திவிடுகிறோம் என்று ஒரே பதிலை பல ஆண்டுகளாக கூறிவருகின்றனர்.

கடந்த 2021, மே 4–ம் தேதி எனது சகோதரர் திரு. P. Hamsa காலமாகிவிட்டார். ஆகையினால் நான் நெல்லியாளம் நகராட்சியில் வேலை செய்யும் ஒரு நபரை அணுகி இறந்த நபரின் EMD/ FSD தொகையை திருப்பி பெறுவதற்கு என்ன நடைமுறை என்று கேட்டபொழுது அவர் கூறிய செய்தி மிகவும் அதிர்ச்சிகரமானதாக உள்ளது. அவர் கூறியது என்னவென்றால் அப்போதைய நெல்லியாளம் நகராட்சியின் கமிஷ்னர் திரு. அப்துல் ஹாரிஸ் மற்றும் அவருடன் சேர்ந்து மற்ற சில அலுவலர்களும் எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு சேர வேண்டிய சுமார் ரூ.50,00,000/–க்கும் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மேலான EMD மற்றும் FSD தொகையை எங்களுக்கு தெரியாமல் அவர்களின் சொந்த தேவைக்காக கையாடல் செய்துவிட்டதாக அவர் கூறினார். இந்த தகவலை கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன். ஆகையால் இந்த முறைகேடான EMD மற்றும் FSD தொகை கையாடல் செய்யப்பட்டது குறித்து சட்டப்படி விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை பெற்றுத்தரவும் மேலும் சட்டப்படி எனக்கும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் சேர வேண்டிய சுமார் ரூ. 50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தொகையை திரும்பப் பெற்றுத் தர வழிவகை செய்யுமாறு தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விசாரணையின் போது தேவைப்பட்டால் மேலும் ஆதாரங்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ சமர்ப்பிக்க அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

மேலும், இப்புகாரின்படி நெல்லியாளம் நகராட்சி அலுவலர்களால் எனக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் சேரவேண்டிய EMD/ FSD வைப்புத் தொகை கையாடல் செய்யப்பட்டதாலும் மற்றும் கையாடல் செய்யப்பட்ட தொகை ரூ.50,00,000/–ற்கும் மேல் இருக்கும் என்று யூகிப்பதாலும், இப்புகாரினை உடனடியாக விசாரணைக்கு எடுத்து விரைவில் முடித்து தருமாறும் வேண்டுகிறேன்.''
என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு நெல்லியாளம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 23.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) நெல்லியாளம் நகராட்சி ஆணையர் தனது 12.06.2023 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1720/2023/இ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

“நெல்லியாளம் நகராட்சியில் சில ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு EPF சந்தா தொகை செலுத்தாததால், மேற்படி தொகையை உரிய தலைப்பின்கீழ் செலுத்தக்கோரி நேரிலும், பதிவு அஞ்சல்மூலமாகவும், நெல்லியாளம் நகராட்சி அலுவலகக்கடிதங்கள் கடிதம் ந.க.எண். 842/2016, நாள் 21.10.2016, 17.03.2017, 23.03.2017 மற்றும் ந.க.எண். 721/2018, நாள்

23.01.2019, 25.03.2019 (Show Cause Notice) 30.08.2019ல் EPF கணக்கு துவங்க கோரி நெல்லியாளம் நகராட்சி மூலம் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதில் நெல்லியாளம் நகராட்சி மூலம் அனுப்பப்படும் கடிதங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெற்றுக்கொள்ளாமல் Refuse செய்துள்ளனர்.

ஆனால், மேற்படி ஒப்பந்ததாரர்கள் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் தொழிலாளர்களுக்கான சந்தா தொகை செலுத்த அவர்களின் பெயரில் கணக்கு தாக்கல் செய்யவில்லை.

EPF தொகை செலுத்தாத ஒப்பந்ததாரர்கள் (திரு. பி. ராயின், திரு. பி. அம்சா, திரு. அசரப், திரு. ரஹீம், திரு. ரசீது, திரு. பி. சலீம்) தங்களிடம் 20–க்கும் குறைவான பணியாளர்களே உள்ளனர் என்றும், சட்டவிதிகளின்படி, நாங்கள் EPF தொகை செலுத்த தேவையில்லை எனவும், வருங்கால வைப்புநிதி ஆணையத்திற்கு விளக்கம் அளித்துள்ளனர். ஆனால், அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்களை ஏற்காமல் Principal Employer என்ற முறையில் நகராட்சியே ஒப்பந்ததாரர்களிடம் தொழிலாளர் வைப்பு நிதியை செலுத்த அறிவுறுத்துமாறு EPF அலுவலகத்திலிருந்து தெரிவித்தனர்.

இந்நிலையில், மேற்காணும், தொகையை செலுத்தாமல் உள்ளதால் EPF அலுவலகத்தால் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையான ரூ.35,17,818/–ஐ நகராட்சி கணக்கில் இருந்து ஈடு செய்யும் வகையில் மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையம், கோயம்புத்தூர் அவர்களின் உத்தரவு எண். 180/2020, நாள் 15.07.2021 (பெறப்பட்ட நாள் 24.07.2021) –ல் EPF எண் துவங்காமல் EPF தொகை செலுத்தாத 14 ஒப்பந்ததாரர்களிடமிருந்து (திரு. பி. ராயின், திரு. பி. அம்சா, திரு. அசரப், திரு. ரஹீம், திரு. பி. ரஷீது, திரு. பி. சலீம், திரு. முகமதுபாரூக், திரு. இளையபெருமாள், திரு. சிவகுமார், திரு. சாகுல் அமீது, திரு. குட்டப்பன், திரு. சுலைமான், திரு. நாராயணன், திரு. செல்லம்) ரூ.35,03,113/– + அம்மா உணவக பணியாளர்களின் தொகை ரூ.14,705/– = ரூ.35,17,818/– ஐ செலுத்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

நெல்லியாளம் நகராட்சி அலுவலக கடித ந.க.எண். 721/2018, நாள் 26.07.2021 மற்றும் 03.08.2021–ன் வாயிலாக சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு EPF அலுவலகத்தின் உத்திரவினை இணைத்து EPF தொகையினை செலுத்த கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் திரு. பி. ராயின், திரு .பி. அம்சா, திரு. அசரப், திரு. ரஹீம், திரு. ரசீது, திரு. பி. சலீம், ஆகிய ஒப்பந்ததாரர்களால் EPF கணக்கு துவங்கி மேற்காணும் தொகையினை செலுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனை எதிர்த்து மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையம், கோயம்புத்தூர் அவர்களின் உத்தரவு எண். 180/2020, நாள் 15.07.2021–ல் காணும் உத்திரவினை தொடர்ந்து The Central Government Industrial Tribunal cum Labour Court, Nungambakkam, Chennai Extract of the Order dated 15.09.2021 மற்றும் மண்டல ஆணையர் II தொழிலளர் வருங்கால வைப்புநிதி ஆணையம் அவர்களின் கடிதம் ந.க.எண். TN/CB/CBE/CC-b(18)/1529484/18F/2021 நாள் 20/10/2021–ல் காணும் தொழில்துறை மற்றும் தொழிலாளர் Labour Court–ல் இந்நகராட்சி மூலம் இத்தொகையினை நெல்லியாளம் நகராட்சியால் செலுத்த இயலாது என மேல் முறையீடு செய்யப்பட்டது. சென்னை உயர்நீதி மன்ற உத்தரவில் ஒப்பந்ததாரர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.35,17,818/– ல் 40% தொகை ரூ.14,07,127/–ஐ செலுத்தி மேல்முறையீடு செய்யவும் 16.12.2021 வரை தடை உத்திரவுடன் மேலும் மூன்று மாத காலத்திற்குள் செலுத்தி மேல்முறையீடு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் 40% தொகையை செலுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் தெளிவுரை கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் மூலம் நெல்லியாளம் நகராட்சி கடிதம் ந.க.எண். 721/2021/இ1, நாள் 03.02.2022–ன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. The Central Government Industrial Tribunal cum Labour Court, Nungambakkam, Chennai–யின் உத்தரவு மூலம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக 08.02.2022–ல் உத்தரவிட்டது (21.02.2022–ல் கிடைக்கப்பெற்றது). இந்நிலையில் உதவி ஆணையர் (Compliance) பொது வருங்கால வைப்பு நிதி ஆணையர், கோவை அவர்களின் 8F of the EPF & Misc. Provision Act, 1952

உத்தரவு எண். CB/CBE/ENF/CC-18/1529484/8F/2022 நாள் 07.03.2022–ன் மூலம் நெல்லியாளம் நகராட்சியின் அனைத்து வங்கி கணக்குகளையும் முடக்கம் செய்துவிட்டு பாரத வங்கி மேலாளரிடம் ரூ.35,17,818/– க்கான கேட்பு வரைவோலை உதவி ஆணையர், EPFO அவர்களிடம் வழங்கப்பட்டதாக கடிதம் பெறப்பட்டது. நெல்லியாளம் நகராட்சியிலிருந்து வங்கி கேட்பு வரைவோலை மூலம் பெற்று சென்ற தொகை ரூ.35,17,818/–ஐ திருப்பி வழங்க கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

EPF அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் 14 பணிகள் செய்யும் ஒப்பந்ததாரர்கள் EPF எண் எடுக்கவில்லை என்பதை வலியுறுத்தி அவர்கள் செலுத்த வேண்டிய தொகையான ரூ.35,17,818/–ஐ செலுத்த கோரியிருந்தார்கள். நெல்லியாளம் நகராட்சி ஒப்பந்ததாரர்கள் EPF எண் எடுத்து கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியதன் பேரில் 61 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தம் புதுப்பிக்கும் தருவாயில் 55 நபர்கள் EPF எண் எடுக்க செய்துள்ளோம். மீதமுள்ள 6 நபர்கள் (திரு. பி. ராயின், திரு. பி. ரஹீம், திரு. பி. அசரப், திரு. பி. சலீம், திரு.பி.நௌசாத், திரு.பி.ரஷீத்) EPF எண் எடுக்கவில்லை. தற்போது எடுத்துள்ளார்கள்.

மேற்காணும் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட வேண்டிய EPF தொகையினை நெல்லியாளம் நகராட்சியில் அனைத்து பணிகளுக்காகவும், பொதுமக்களின் வாழ்வாதார அத்தியாவசிய பணிகளுமான குடிதண்ணீர், சாலைமேம்பாட்டு பணிகள், கொரனாநோய் தொற்று பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதற்காகவும், அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்களை விநியோகம் செய்யவும், பணியாளர்களின் ஊதியத்திற்காகவும், பொதுமக்களில் இறந்து போனவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5000/– வீதம் ஈமச்சடங்கிற்காக வழங்க வேண்டிய தொகைகளாகும். ஆகவே சம்பந்தப்பட்ட EPF கணக்கு எடுக்காத ஒப்பந்ததாரர்களின் EMD மற்றும் Security Deposit தொகையிலிருந்து ரூ.32,10,803/– ஐ நெல்லியாளம் நகராட்சி கணக்கிற்கு GJV No.067/22-23/RF/0000469 நாள் 12.05.2022 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளபடி நெல்லியாளம் நகராட்சி அலுவலர்களால் எந்த கையாடலும் செய்யப்படவில்லை. மேலும் மேற்காணும் ஒப்பந்ததாரர்களுக்கு கோரிக்கையின் பேரில் 03.05.2023 அன்று EMD மற்றும் Security Deposit தொகை ரூ.41,01,867/– இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இப்புகார் தொடர்பாக நெல்லியாளம் நகராட்சியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 02.01.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 27.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. P. ராயன் என்பவர் தனது 29.12.2023 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 04.01.2024–ல் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதும், விசாரணையை 09.01.2024 அல்லது 10.01.2024–ல் விசாரணையை வைக்க கோரியிருந்தார்.

6) எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் 04.01.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்.

''நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் நகராட்சியில் சில ஒப்பந்ததாரர்களிடம் பணியாற்றும் பணியாளர்களுக்கு EPF சந்தாத் தொகை செலுத்தாத நிலையில், மே 2016 முதல் மார்ச் 2019 வரையிலான காலத்திற்கு EPF கணக்கைத் துவக்கி அதனை உரிய தலைப்பின் கீழ் செலுத்தக்கோரி 21.10.2016 முதல் 30.08.2019 வரை தொடர்ச்சியாக மனுதாரர் மற்றும் 5 பேருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் 6 பேர் மேற்படி காலத்திற்கான வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் தொழிலாளர்களுக்கான சந்தாத் தொகையை செலுத்த அவர்களின் பெயரில் கணக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட 6 பேரும் தங்கள் EPF தொகை செலுத்த தேவையில்லை என வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டு, அவர்களது விளக்கங்கள் ஏற்கப்படாத நிலையில், Principal Employer என்கின்ற முறையில் நகராட்சியே ஒப்பந்ததாரர்களிடம் தொழிலாளர் வைப்பு நிதியை செலுத்த அறிவுறுத்துமாறு EPF அலுவலகம் தெரிவித்த நிலையில், மேற்கண்ட 6 பேருக்கும் ரூ.35,03,113/–ஐ செலுத்திட உத்தரவிட்டு மேற்படி நபர்கள் செலுத்தவேண்டிய தொகையினை நகராட்சி கணக்கிலிருந்து EPF துறையினர் பிடித்தம்

செய்ததைத் தொடர்ந்து அவர்களது வைப்பு தொகை கணக்கிலிருந்து முன் வைப்புத் தொகை (Earnest Deposit) முந்தைய நகராட்சி ஆணையரால் நகராட்சி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்கண்ட EPF தொகையை மேற்கண்ட 6 பேரும் மேற்படி காலத்திற்கான EPF கணக்கை தொடங்கி செலுத்தி அறிக்கை அளித்தவுடன் EMD மற்றும் Security Deposit தொகை திரும்ப வழங்கிட பரிசீலிக்கப்படும்.

மேலும் எனது **03.01.2024** நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7) நெல்லியாளம் நகராட்சி ஆணையர் தனது 03.01.2024 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1720/2023/இ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு மேல்விளக்கம் அளித்துள்ளார் : -

"நெல்லியாளம் நகராட்சியில் சில ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு EPF சந்தா தொகை செலுத்தாததால், மேற்படி தொகையை உரிய தலைப்பின்கீழ் செலுத்தக்கோரி பதிவு அஞ்சல் மூலமாக, நெல்லியாளம் நகராட்சி அலுவலக கடிதங்கள் ந.க.எண். **842/2016** நாள் **21.10.2016, 17.03.2017** மற்றும் **23.03.2017** மற்றும் நெல்லியாளம் நகராட்சி அலுவலக ந.க.எண்.**721/2018**, நாள் **23.01.2019, 25.03.2019** (Show Cause Notice) **30.08.2019**ல் ஆகியவற்றில் EPF கணக்கு துவங்கி அறிக்கை சமர்ப்பிக்க கோரி நெல்லியாளம் நகராட்சி மூலம் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.அதில் நெல்லியாளம் நகராட்சி மூலம் அனுப்பப்படும் கடிதங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெற்றுக்கொள்ளாமல் Refuse செய்துள்ளனர்.

ஆனால், மேற்படி, ஒப்பந்ததாரர்கள் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் தொழிலாளர்களுக்கான சந்தா தொகையை செலுத்த அவர்களின் பெயரில் கணக்கு தாக்கல் செய்யவில்லை.

EPF தொகை செலுத்தாத ஒப்பந்ததாரர்கள் (திரு. பி. ராயன், திரு. பி. அம்சா, திரு. பி. அசரப், திரு. பி. ரஹீம், திரு. பி. ரஷீது, திரு. பி. சலீம்) தங்களிடம் 20க்கும் குறைவான பணியாளர்களே உள்ளனர் என்றும், சட்டவிதிகளின்படி, நாங்கள் EPF தொகை செலுத்த தேவையில்லை எனவும், வருங்கால வைப்புநிதி ஆணையத்திற்கு விளக்கம் அளித்துள்ளனர். ஆனால், அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், Principal Employer என்ற முறையில் நகராட்சியே ஒப்பந்ததாரர்களிடம் தொழிலாளர் வைப்பு நிதியை செலுத்த அறிவுறுத்துமாறு EPF அலுவலகத்திலிருந்து தெரிவித்தனர்.

மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையம், கோயம்புத்தூர் அவர்களின் உத்தரவு எண்.**180/2020**, நாள் **15.07.2021**ல் காணும் EPF அலுவலகத்தால் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையான ரூ.**35,17,818/–**ஐ (ஒப்பந்ததாரர்களின் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.**35,03,113/–** மற்றும் அம்மா உணவக பணியாளர்களின் தொகை ரூ.**14,705/–**) செலுத்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

நெல்லியாளம் நகராட்சி அலுவலக கடிதங்கள் ந.க.எண்.**721/2018**, நாள் **26.07.2021** மற்றும் **03.08.2021–ன்** வாயிலாக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு EPF அலுவலகத்தின் உத்திரவினை இணைத்து EPF தொகையினை செலுத்த கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் திரு. பி. ராயன், திரு. பி. அம்சா, திரு. பி. அசரப், திரு. பி. ரஹீம், திரு. பி. ரசீது, திரு. பி. சலீம், ஆகிய ஒப்பந்ததாரர்களால் EPF கணக்கு துவங்கி மேற்காணும் தொகையினை செலுத்தி அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனை எதிர்த்து மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையம், கோயம்புத்தூர் அவர்களின் உத்தரவு எண்.**180/2020**, நாள் **15.07.2021**ல் வழங்கப்பட்ட உத்திரவினை தொடர்ந்து, The Central Government Industrial Tribunal cum Labour Court, Nungambakkam, Chennai Extract of the Order dated 15.09.2021 மற்றும் மண்டல ஆணையர் II தொழிலளர் வருங்கால வைப்புநிதி ஆணையம் அவர்களின் கடிதம் ந.க.எண். TN/CB/CBE/CC-b(18)/1529484/18F/2021 நாள் 20/10/2021–ல் காணும் தொழில்துறை மற்றும் தொழிலாளர் Labour Court–ல் நெல்லியாளம் நகராட்சி மூலம் இத்தொகையினை நெல்லியாளம் நகராட்சியால் செலுத்த இயலாது என மேல் முறையீடு செய்யப்பட்டது. சென்னை உயர்நீதி மன்ற உத்தரவில் ஒப்பந்ததாரர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.**35,17,818/–**ல் 40% தொகை ரூ,**14,07,127/–** ஐ செலுத்தி மேல்முறையீடு செய்யவும் **16.12.2021** வரை தடை உத்திரவுடன் மேலும் மூன்று மாத காலத்திற்குள் செலுத்தி மேல்முறையீடு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் 40% தொகையை செலுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் தெளிவுரை கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் 02.02.2022–ம் தேதிய உத்தரவு மூலம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக The Central Government Industiral Trubunal cum Labour Court, Nungambakkam, Chennai ஆணை நாள் 08.02.2022 மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் உதவி ஆணையர் (Compliance) பொது வருங்கால வைப்பு நிதி ஆணையர், கோவை அவர்களின் 8F of the EPF & Misc. Provision Act, 1952 உத்தரவு எண். CB/CBE/ENF/CC-18/1529484/8F/2022, நாள் 07.03.2022 மூலம் Accordance with the provisions of sub-clause (viii) of the sub-section 3 of the Section 8F of the Employees Provident Funds and Miscellaneous Provisions Act, 1952-ன் படி உதவி ஆணையர் (Compliance) பொது வருங்கால வைப்புநிதி அலுவலகம் அவர்களால் நெல்லியாளம் நகராட்சியின் அனைத்து வங்கி கணக்குகளையும் முடக்கம் செய்துவிட்டு பாரத மாநில வங்கி மேலாளரிடம் ரூ.35,17,818/– ற்கான கேட்பு வரைவோலை உதவி ஆணையர், EPFO அவர்களால் பெறப்பட்டதாக கடிதம் வரப்பெற்றது.

இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள் EPF எண் எடுத்து கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியதன் பேரில் 61 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தம் புதுப்பிக்கும் தருவாயில் 55 நபர்கள் EPF எண் எடுத்துள்ளனர். மீதமுள்ள 6 நபர்கள் (திரு.பி.ராயின், திரு.பி.ரஹீம், திரு.பி.அசரப், திரு.பி.சலீம், திரு.பி.நௌசாத், திரு.பி.ரஷீத்) மேற்படி காலத்திற்கான EPF எண் எடுக்கவில்லை.

மேற்காணும் ஒப்பந்ததாரர்கள் உரிய விதிகளின்படி EPF கணக்கு தொடங்கி தொகையை செலுத்தாமையால் பொதுமக்களின் வாழ்வாதார அத்தியாவசிய பணிகளான குடிநீர், சாலைமேம்பாடு பணிகள், இதர அடிப்படை அத்தியாவசிய நிர்வாக செலவினங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய செலவினத்தினத்திற்காக நகராட்சி கணக்கில் இருப்பில் இருந்த தொகை ரூ.35,17,818/– நேரடியாக பாரத மாநில வங்கியிலிருந்து EPF அலுவலகம் ஈடு செய்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட EPF கணக்கு எடுக்காத ஒப்பந்ததாரர்களின் EMD மற்றும் Security Deposit கணக்கு தலைப்பிலிருந்து ரூ.35,03,113/– மட்டும் 12.05.2022 அன்று நகராட்சி கணக்கிற்கு அப்போது இருந்த நகராட்சி ஆணையர் மாற்றம் செய்துள்ளார்.

மேற்காணும் ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிப்புகளின்படி மேற்படி காலத்திற்கான EPF கணக்கு தொடங்கி அதற்கான தொகையை செலுத்திய பின்னர் அவர்களுக்கு சேரவேண்டிய மேற்படி காலத்திற்கான EMD மற்றும் Security Deposit தொகை திரும்ப வழங்கிட பரிசீலிக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் 29.12.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்ட கோரிக்கையினை ஏற்று மனுதாரருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 21.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 06.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9) மனுதாரர் திரு. ராயன் என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

"நான் மற்றும் எனது சகோதரர்கள் திருவாளர்கள் P.அஷ்ரப், P.ரஹீம், P.ரஷீத் மற்றும் P. சலீம் ஆகிய அனைவரும் திரு. P.Rahyin Constructions Company Pvt. Ltd., என்ற பெயரில் நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பல பணிகள் செய்து வந்துள்ளோம். இதில் எனது இறந்து போன சகோதரர் திரு. P.ஹம்ஷா என்பவரும் உள்ளார். முன் வைப்பு தொகைக்காகவும் மற்றும் பாதுகாப்பு தொகைக்காகவும் எங்களது கணக்கிலிருந்து (P.ராயன், P.அஷ்ரப், P.ரஹீம், P.ரஷீத், P.சலீம், P. ஹம்ஷா மற்றும் Rayin Constructions Company Pvt. Ltd.,) ரூ.35,17,818/– நெல்லியாளம் நகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் மேற்கண்ட எங்களது கணக்கிலிருந்து ரூ.43,00,000/– (ரூபாய் நாற்பத்தி மூன்று லட்சம்) எங்களுடைய அனுமதியின்றி நகராட்சியால் முன்வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்புத்தொகைக்காக பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நெல்லியாளம் நகராட்சியால் ஒரே நாளில் மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் வங்கி கணக்கிலிருந்து முன்வைப்பு தொகை மற்றும் பாதுகாப்புத் தொகைக்காக தோராயமாக ரூ.43,00,000/– எடுக்கப்பட்டுள்ளது.

எனவே எங்களுக்கு சேர வேண்டிய ரூ.43,00,000/– த்தை மீண்டும் எங்களது வங்கி கணக்குக்கு மாற்றித்தருவதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

10) எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையர் தனது 20.01.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1720/2023/இ1–ல் 21.01.2025 மற்றும் 22.01.2025 ஆகிய தினங்களில் மாநில அளவிலான மதிப்பிற்குரிய Monitoring Higher Officer அவர்கள் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்கள் நெல்லியாளம் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்ய உள்ளதால் 21.01.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் கலந்து கொள்ள நெல்லியாளம் நகராட்சி மேலாளரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நெல்லியாளம் நகராட்சி மேலாளர் திரு. ஆர். சுகுமார் என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

"திருவாளர்கள் P.அஷ்ரப், P.ரஹீம், P.ரஷீத் மற்றும் P.சலீம் அனைவரும் P. Rayin Constructions Company Pvt. Ltd., என்ற பெயரில் நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பல பணிகள் செய்து வந்துள்ளனர்.

மேற்காணும் ஒப்பந்ததாரர்கள் உரிய விதிகளின்படி EPF கணக்கு தொடங்கி தொகையை செலுத்தாமையால் பொதுமக்களின் வாழ்வாதார அத்தியாவசிய பணிகளான குடிநீர், சாலைமேம்பாடு பணிகள், இதர அடிப்படை அத்தியாவசிய நிர்வாக செலவினங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய செலவினத்திற்காக நகராட்சி கணக்கில் இருப்பில் இருந்த தொகை ரூ.35,17,818/– நேரடியாக பாரத மாநில வங்கியிலிருந்து EPF அலுவலகம் ஈடு செய்துள்ளது. எனவே சம்மந்தப்பட்ட EPF கணக்கு எடுக்காத ஒப்பந்ததாரர்களின் EMD மற்றும் Security Deposit கணக்கு தலைப்பிலிருந்து ரூ.35,03,113/– மட்டும் 12.05.2022 அன்று நகராட்சி கணக்கிற்கு அப்போது இருந்த நகராட்சி ஆணையர் மாற்றம் செய்துள்ளார்.

மேலும், மேற்படி கம்பெனியிடமிருந்து EPF கணக்கிற்காக ஈடு செய்யப்பட்டது எவ்வளவு என்பது பற்றியும் EMD மற்றும் SD நகராட்சியால் மனுதாரரின் கணக்கிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டதா அல்லது EPF ஆணையரால் நேரடியாக வங்கி கணக்கிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டதா என என்னால் சரியான முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. மேலும், கோப்புகளின் விபரம் முழுமையாக அறிந்து தெரிவிக்க வேண்டிய சூழ்நிலையில், நெல்லியாளம் நகராட்சிக்கு மீண்டும் ஒரு விசாரணை தேதி வழங்கும்படி மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை நெல்லியாளம் நகராட்சி சார்பில் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

11) எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையர் சார்பில் நெல்லியாளம் நகராட்சி மேலாளர் திரு. ரா. சுகுமார் என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு அளித்த வாக்குமூலத்தில் கோப்புகளின் விபரம் முழுமையாக அறிந்து தெரிவிக்க வேண்டியதால், நெல்லியாளம் நகராட்சிக்கு மீண்டும் ஒரு விசாரணை தேதி வழங்கும்படி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மனுதாரரும், எதிர் மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையரும் 30.01.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.01.2025 நாளிட்ட அழைப்பாணை மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

12) மனுதாரர் திரு.ராயன் என்பவர் 30.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"நான் மற்றும் எனது குடும்பத்தினரால் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக நீலகிரி மாவட்டத்திலுள்ள நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்தங்கள் எடுத்து, பணிகள் செய்து வருகிறோம். மேற்படி பணிகளுக்கான EMD மற்றும் FSD தொகையினை முறையாக செலுத்தி நல்ல முறையில் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். கடந்த 2012 ஆம் ஆண்டு வரை நாங்கள் செலுத்திய EMD மற்றும் FSD தொகையினை எங்களுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு நெல்லியாளம் நகராட்சியால் வழங்கப்பட்ட ஒப்பந்த புள்ளி ஆணையில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்வது குறித்து 2022 ஆம் ஆண்டு வரை எவ்வித நிபந்தனையும் குறிப்பிடப்படவில்லை. 2023 ஆம் ஆண்டிலிருந்துதான் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் எங்களால் 2023 மே மாதம் முதல் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு தொடங்கப்பட்டு இதுவரையில் முறையாக செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னால் எங்களால் செலுத்தப்பட்ட EMD மற்றும் FSD தொகை ரூ.43 இலட்சம் விதிமீறி நகராட்சியால் எனது மற்றும் எனது குடும்பத்தினரின் பெயரிலுள்ள வைப்புத் தொகைகளை அனுமதியின்றி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, எங்களால் செலுத்தப்பட்ட EMD மற்றும் FSD தொகையான ரூ. 43 இலட்சம் நகராட்சியால் திரும்ப வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

13) எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி ஆணையர் சார்பில் நெல்லியாளம் நகராட்சி அலுவலக மேலாளர் திரு. பெ. முனியப்பன் என்பவர் 30.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

“நெல்லியாளம் நகராட்சியில் 2019 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் 61 ஒப்பந்ததாரர்கள் இருந்தனர். இதில் 46 ஒப்பந்ததாரர்கள் 2016 முதல் 2018 முடிய EPF தொகை செலுத்திவிட்டனர். மீதி 15 ஒப்பந்ததாரர்கள் (இறந்த ஒப்பந்ததாரர்கள் உட்பட) EPF தொகை செலுத்தப்படவில்லை, இதில் திரு.ராயன் மற்றும் அவரது குடும்பதை சேர்ந்த (இவருடன் சேர்த்து 7 ஒப்பந்ததாரர்கள் EPF தொகை செலுத்த கோரி EPF நிர்வாகத்தின் மூலமும் நகராட்சி அலுவலக அறிவிப்பின் மூலமும் பலமுறை அறிவிப்புகள் வழங்கியும் EPF தொகை செலுத்தாததால் EPF நிறுவனத்தின் மூலம் நகராட்சி ஆணையர் Principal Employer என்ற முறையில் நகராட்சி வங்கி கணக்கில் இருந்து 10.03.2022 அன்று ரூ.35,17,818/– (அம்மா உணவக பணியாளர்கள் EPF தொகை ரூ.14,705/– உட்பட) ஐ EPF உதவி ஆணையர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி வங்கி வரைவோலை வாயிலாக எடுத்து கொண்டனர். நகராட்சிக்கு நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.ராயன் உட்பட ஏழு நபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வைப்புத் தொகையிலிருந்து ரூ.32,25,508/– ஐ இதர ஒப்பந்ததாரரிடம் ரூ.2,77,605/– ஆக மொத்தம் ரூ.35,03,223/– தொகையினை 12.05.2022 அன்று நகராட்சி கணக்கிற்கு ஈடு செய்யப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்தவாறு தொகை ரூ.43,00,000/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்பது சரியானதல்ல எனவும், பிடித்தம் செய்யப்பட்டு EPF தொகைக்காக ஈடு செய்யப்பட்ட தொகை ரூ.32,25,508/– என்பதால், திரு. ராயன் மற்றும் அவர் சார்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய தொகை ஏதுமில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

14) விசாரணையின்போது எதிர்மனுதாரர் சார்பாக ஆஜரானநெல்லியாளம் நகராட்சி மேலாளர் சமர்ப்பித்த நெல்லியாளம் நகராட்சி ஆணையரின் 29.01.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1720/2023/இ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நெல்லியாளம் நகராட்சியில் சில ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு EPF சந்தா தொகை செலுத்தாததால், மேற்படி, தொகையை உரிய தலைப்பின்கீழ் செலுத்தக்கோரி பதிவு அஞ்சல் மூலமாக, நெல்லியாளம் நகராட்சி கடித ந.க.எண்.842/2016, நாள் 21.10.2016, 17.03.2017, 23.03.2017 மற்றும் கடித ந.க.எண்.721/2018, நாள் 23.01.2019, 25.03.2019 (Show cause Notice) 30.08.2019 ஆகியவற்றில் EPF கணக்கு துவங்கி அறிக்கை சமர்ப்பிக்க கோரி நெல்லியாளம் நகராட்சி மூலம் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அதில் நெல்லியாளம் நகராட்சி மூலம் அனுப்பப்படும் கடிதங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெற்றுக்கொள்ளாமல் Refuse செய்துள்ளனர்.

ஆனால், மேற்படி, ஒப்பந்ததாரர்கள் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் தொழிலாளர்களுக்கான சந்தா தொகையை செலுத்த அவர்களின் பெயரில் கணக்கு துவங்கப்படவில்லை.

EPF தொகை செலுத்தாத ஒப்பந்ததாரர்கள் (திரு. பி. ராயின், திரு.பி.அம்சா (தற்போது இறப்பு) திரு.பி.அசரப், திரு.பி.ரஹீம், திரு.பி.ரஷீது, திரு.பி.சலீம்) தங்களிடம் 20–க்கும் குறைவான பணியாளர்களே உள்ளனர் என்றும், சட்டவிதிகளின்படி, நாங்கள் EPF தொகை செலுத்த தேவையில்லை எனவும், வருங்கால வைப்புநிதி ஆணையத்திற்கு விளக்கம் அளித்துள்ளனர். ஆனால், அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், Principal Employer என்ற முறையில் நகராட்சியே ஒப்பந்ததாரர்களிடம் தொழிலாளர் வைப்பு நிதியை செலுத்த அறிவுறுத்துமாறு EPF அலுவகத்திலிருந்து தெரிவித்தனர்.

மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையம், கோயம்புத்தூர் அவர்களின் உத்தரவு எண். 180/2020 நாள் 05.07.2021–ல் EPF அலுவலகத்தால் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையான ரூ.35,17,818/–ஐ (ஒப்பந்ததாரர்களின் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.35,03,113/– மற்றும் அம்மா உணவக பணியாளர்களின் தொகை ரூ.14,705/–) கீழ்கண்டவாறு செலுத்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

Following Contractors failed to take EPF Code Number and to comply as per the directions of the Municipality.

| | | |
|---|---|---|
| 1 | P.Rayin | Civil Contractor |
| 2 | Elaiyaperumal | Civil Contractor |
| 3 | P. Hamsa | Civil Contractor |
| 4 | Kuttappan | Civil Contractor |
| 5 | Mohammed Farook | Civil Contractor |
| 6 | Narayanan | Civil Contractor |
| 7 | P.Ashraf | Civil Contractor |
| 8 | P.Rahim | Civil Contractor |
| 9 | P.Rasheed | Civil Contractor |
| 10 | P.Saleem | Civil Contractor |
| 11 | Sahul Ahmed C | Civil Contractor |
| 12 | Sulaiman | Civil Contractor |
| 13 | Sellam | Civil Contractor |
| 14 | Vishwakumar | Civil Contractor |

Major works contracts of the Municipality is found to be undertaken by Shri.Rayin and his associates (Shri. P. Rahim, Shri. P. Ashraf, Shri. P. Hamsa, Shri. P. Saleem and P. Rasheed), However, despite persuasion by the Municipality they have not taken EPF code number and have failed to comply under the EPF Act.

Further, above referred Contractor namely Shri.P.Rayin has filed a Writ Petition No.786 of 2021 before the Honorable Court of Madras challenging the tender process between the Contractors and the Municipality wherein the Municipality has insisted EPF Code Number for the Contractor as a precondition in the tender notice. The petitioner has stated that he is not having permanent employees or workers and hence not coverable under the EPF Act. In response the Commissioner of Municipal councils in Tamilnadu has brought the Provisions of the EPF & MP Act, 1952 and clarified that it is the responsibility of the Municipalities to ensure that all eligible employees engaged directly or indirectly should get the social security benefits under EPF Act and Municipality being the Principal employer covered under EPF Act has to ensure the compliance directly or through contractors and hence the above precondition. Based on the submission of the Municipality, Hon'ble High Court has dismissed the petition vide order dated 29.06.2021.

Shri.P.Rayin has also made a representation to the Regional PF Commissioner to exempt him and his family members from the payment of any EPF contributions on the plea that he has not engaged any employees on regular basis, which is not acceptable as per the provisions of EPF Act.

The Government of Tamil Nadu, vide Letter No.14070/ME.3/2016-4, dated 20.12.2016 addressed to the Commissioners of all Municipalities clarified that the Notification No. S.O.30(E) dated 08.11.2011 issued by the Central Government shall cover all employees of establishments as per definition of 'employee' under Section 2(f) of the EPF Act excluding the employees who are getting benefits of provident fund and pension according to TNMSP Rules of the State Government or municipal laws, etc. and that the benefits under the EPF Act have to be extended to all eligible employees. Thus, the persons engaged for work by contractors like Shri Rayin and his associates are certainly falling under the definition 'employee' and are the employees of the establishment M/s. Nelliyalam Municipality.

The Municipality has stated that the hill area workers' wages are above the PWD rates and are paid more than Rs.15,000-/ per month, which is more than the EPF Wage ceiling limit and are thus 'excluded'. Neither the establishment M/s. Nelliyalam Municipality nor the registered civil contracts provided the complete particulars of employees engaged from May 2016 onwards, viz., employee particulars, period of employment and actual amount of wages paid. In the absence of the complete details, there is no other alternative but to arrive the dues based on the average monthly basis (extracted from the particulars of monthly bill payment provided by the Municipality in respect of the civil contractors) based on guidelines issued by the Government of India, Central Public Works Department's office memorandum No.DG/MAN/312 dated 04.07.2014 for Manual Arrangement to arrive at the labour components of the total contract amount.

The inquiry is going on for a long period of time and Zonal Office has issued directions to conclude the inquiry at the earliest. Further, employees engaged through the contractors of a covered establishment should not be deprived of PF & Pension benefits due to lack of information from these contractors.

It is once again submitted that in the absence of any concrete and basic records produced, the dues are calculated on the basis of the above CPWD prescribed labour rates, has to be taken. In this context the order of W.P.No.31410 of 2019 and WMP No.31581 of 2019 in The Commissioner Udumalpet Municipality Vs the Assistant Provident Fund Commissioner, Coimbatore is reproduced below-

"Undoubtedly, the Writ Petitoner is also liable to pay the contributions and thereafter, recover the same from the contractors. Ultimately, the very purpose and object of the Employees' Provident fund and Miscellaneous Provisions Act, 1952 is to ensure that the welfare of the workmen is protected. Therefore, the petitioner being a Municipality is duty bound to cooperate with the EPF authorities for collection of particulars in respect of the workman engaged by the contractor with whom they have entered into an agreement. Thus, all these efforts are to be taken by the Municipality concerned to furnish the particulars and details to the respondents, enabling them to recover the contributions as per the provisions of the Act".

It is submitted that the law as it stands at present does not make any distinction between the "employees" employed directly by the employer or through the contractors and whether the employees engaged for "One day" or "one week" or "one month". It is the principal employer, who is responsible for the implementation of the provisions of the EPF Act and the Schemes. Accordingly, the establishment M/s. Nelliyalam Municipality is to ensure payment of EPF contributions in respect of the all eligible employees of contractors who have not taken EPF code number for compliance. Municipality is also to ensure regular compliance by the contractors who are registered directly with EPFO before releasing their payment.

Shri.Rayin and his associated contractors are reported to the major contractors being engaged by the Municipality, a covered establishment and hence all eligible employees of these contractors should be extended social security benefits either through Principal employer or directly. Nelliyalam Municipality is covered establishment under the EPF Act and hence it is the prerogative of the Municipality either to insist PF code Number for the contractors or to enrol the employees of the contractors under the code number of the Municipality.

**Staff of Amma Unavagam Canteen:**

It has already been submitted vide the deposition dated 09.12.2019 that the permanent employees working in all the sections of the Municipality are deriving the benefits of Provident fund and Pension according to the rules of the Municipality. However, the staff of 'Anna Unavagam' canteen of the Municipality were deprived of the benefit and hence dues of Rs. 7,70,260/- was worked out. Against this, the Municipality has remitted Rs.6,45,592/- for the Period May 2016 to March 2019. Regarding the difference in Payment, Municipality has brought out that two of the Amma Unavaga employees Smt. Arya Mala (PPO No.120984) and Smt. Arayee (alias) Rani (PPO No.102177) are getting Pension under EPS 1995 and thus are "Excluded Employees". Accordingly such dues in respect of excluded employees are reduced in the latest dues statements. Further, one Amma Unavagam staff Smt. Sindumathi's dues for the period May 2016 to December 2016 has not been remitted and hence the same is added in the latest dues and submitted.

As such based on the available records/particulars provided by the Nelliyalam Municipality, a Revised Dues Statement is prepared for the inquiry period as under:-

Revised Dues Statement (57 B) for the period – May 2016 to March 2019.

| Months | Wages | A/c No. 1EE | A/c No. 1ER | A/c No. 2 | A/c No. 10 | A/c No. 21 | A/c No. 22 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| May-16 | 13478 | 1617 | 494 | 500 | 1123 | 67 | 200 | 4001 |
| Jun-16 | 37463 | 44965 | 13749 | 3184 | 31207 | 1873 | 200 | 95178 |
| Jul-16 | 517201 | 62064 | 18981 | 4396 | 43083 | 2586 | 200 | 131310 |
| Aug-16 | 47461 | 5695 | 1741 | 500 | 3954 | 237 | 200 | 12327 |
| Sep-16 | 33686 | 4042 | 1236 | 500 | 2806 | 168 | 200 | 8952 |
| Oct-16 | 36672 | 4401 | 1346 | 500 | 3055 | 183 | 200 | 9685 |
| Nov-16 | 634792 | 76175 | 23297 | 5396 | 52878 | 3174 | 200 | 161120 |
| Dec-16 | 189700 | 22764 | 6962 | 1612 | 12802 | 949 | 200 | 45289 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Jan-17 | 377715 | 45326 | 13862 | 3211 | 31464 | 1889 | 200 | 95952 |
| Feb-17 | 324727 | 38967 | 11917 | 2760 | 27050 | 1624 | 200 | 82518 |
| Mar-17 | 762304 | 91476 | 27976 | 6480 | 63500 | 3812 | 200 | 193444 |
| Apr-17 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| May-17 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| Jun-17 | 31448 | 3774 | 1154 | 500 | 2620 | 157 | 0 | 8205 |
| Jul-17 | 522913 | 62738 | 19188 | 3398 | 43550 | 2614 | 0 | 131488 |
| Aug-17 | 529770 | 63572 | 19442 | 3444 | 44130 | 2649 | 0 | 133237 |
| Sep-17 | 300763 | 36092 | 11038 | 1955 | 25054 | 1504 | 0 | 75643 |
| Oct-17 | 110066 | 13208 | 4040 | 715 | 9168 | 550 | 0 | 27681 |
| Nov-17 | 262403 | 31488 | 9630 | 1706 | 21858 | 1312 | 0 | 65994 |
| Dec-17 | 524983 | 62998 | 19267 | 3412 | 43731 | 2625 | 0 | 132033 |
| Jan-18 | 541638 | 64997 | 19879 | 3521 | 45118 | 2708 | 0 | 136223 |
| Feb-18 | 805100 | 9661 | 2955 | 523 | 6706 | 403 | 0 | 20248 |
| Mar-18 | 903100 | 108372 | 33144 | 5870 | 75228 | 4516 | 0 | 227130 |
| Apr-18 | 28670 | 3440 | 1052 | 500 | 2388 | 143 | 0 | 7523 |
| May-18 | 1175080 | 141010 | 43126 | 7638 | 97884 | 5875 | 0 | 295533 |
| Jun-18 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| Jul-18 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| Aug-18 | 1422817 | 170738 | 52217 | 7114 | 118521 | 7114 | 0 | 355704 |
| Sep-18 | 237283 | 28474 | 8708 | 1186 | 19766 | 1186 | 0 | 59320 |
| Oct-18 | 242125 | 29055 | 8886 | 1211 | 20169 | 1211 | 0 | 60532 |
| Nov-18 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| Dec-18 | 510428 | 61251 | 18732 | 2552 | 42519 | 2552 | 0 | 127606 |
| Jan-19 | 0 | 0 | 0 | 500 | 0 | 0 | 0 | 500 |
| Feb-19 | 225821 | 27090 | 8288 | 1129 | 18811 | 1129 | 0 | 56447 |
| Mar-19 | 2947159 | 353659 | 108161 | 14736 | 245498 | 14736 | 0 | 736790 |
| | Total | 1669109 | 510468 | 93149 | 1155641 | 69546 | 2200 | 3500113 |

Dues Statement in Respect of Amma Unavagam – M/s. Nelliyalam Municipality

| Months | No.of Employees | Wages | A/c No.1EE | A/c No.1ER | A/c No.2 | A/c No.10 | A/c No.21 | A/c No.22 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| May-16 | 1 | 7750 | 930 | 284 | 66 | 646 | 39 | 0 | 1965 |
| Jun-16 | 1 | 7250 | 870 | 266 | 62 | 604 | 36 | 0 | 1838 |
| Jul-16 | 1 | 7750 | 930 | 284 | 66 | 646 | 39 | 0 | 1965 |
| Aug-16 | 1 | 6500 | 780 | 239 | 55 | 541 | 33 | 0 | 1648 |
| Sep-16 | 1 | 6250 | 750 | 229 | 53 | 521 | 31 | 0 | 1584 |
| Oct-16 | 1 | 7750 | 930 | 284 | 66 | 646 | 39 | 0 | 1965 |
| Nov-16 | 1 | 7500 | 900 | 275 | 64 | 625 | 38 | 0 | 1902 |
| Dec-16 | 1 | 7250 | 870 | 266 | 62 | 604 | 36 | 0 | 1838 |
| Total | | | 6960 | 2127 | 494 | 4833 | 291 | 0 | 14705 |

நெல்லியாளம் நகராட்சி அலுவலக கடித ந. க. எண். 721/2018 நாள் 26.07.2021 மற்றும் 03.08.2021 வாயிலாக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு EPF அலுவலகத்தின் உத்திரவினை இணைத்து EPF தொகையினை செலுத்த கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் திரு. பி. ராயின், திரு. பி.அம்சா (தற்போது இறப்பு) திரு. அசரப், திரு. ரஹீம், திரு. பி. ரஷீது, திரு. பி. சலீம், ராயன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய ஒப்பந்ததாரர்களால் EPF கணக்கு துவங்கி மேற்காணும் தொகையினை செலுத்தி அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனை எதிர்த்து கோயம்புத்தூர் மண்டல ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி உத்தரவு எண். 180/2020, நாள் 05.07.2023–ல் காணும் உத்தரவினை தொடர்ந்து, The Central Government Industrial Tribunal cum Labour Court,Nungambakkam,Chennai, Extract of the Order, Dated 15.09.2021 மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையம் அவர்களின் கடிதம் ந.க.எண்.TN/CB/CBE/CC-b(18)/1529484/18F/2021, நாள் 20.10.2021ல் தெரிவித்துள்ளவாறு தொழில் துறை மற்றும் தொழிலாளர் Labour Court–ல் இந்நகராட்சி மூலம் இத்தொகையினை நெல்லியாளம் நகராட்சியால் செலுத்த இயலாது என மேல் முறையீடு செய்யப்பட்டது. சென்னை உயர்நீதி மன்ற உத்தரவில் ஒப்பந்ததாரர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.35,17,818/–ல் 40% தொகை ரூ.14,07,127/–ஐ செலுத்தி மேல்முறையீடு செய்யவும் 16.12.2021 வரை தடை உத்திரவுடன் மேலும் மூன்று மாத காலத்திற்குள் செலுத்தி மேல்முறையீடு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் 40% தொகையை செலுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் தெளிவுரை கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் வழியாக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் 02.02.2022–ம் தேதிய உத்தரவு மூலம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக The Central Government Industrial Trubunal cum Labour Court, Nungambakam, Chennai, Order dated 08.02.2022 மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் உதவி ஆணையர், (Compliance) கோயம்புத்தூர் அவர்களின் 8F of the EPF & Misc. Provision Act, 1952, உத்தரவு எண். CB/CBE/ENF/CC-18/1529484/8F/2022, நாள் 07.03.2022–ன் மூலம் Accordance with the provisions of Sub-clause (viii) of the Sub-Section 3 of the Section 8F of the Employees Provident Funds and Miscellaneous Provisions Act, 1952-ன்படி உதவி ஆணையர் (Compliance) பொது வருங்கால வைப்புநிதி அலுவலகம் அவர்களால் நெல்லியாளம் நகராட்சியின் அனைத்து வங்கி கணக்குகளையும் முடக்கம் செய்துவிட்டு பாரத மாநில வங்கி மேலாளர் ரூ.35,03,113/– + ரூ.14,705/– மொத்தம் ரூ.35,17,818/–ற்கான கேட்பு வரைவோலை நெல்லியாளம் நகராட்சி வங்கி கணக்கிலிருந்து உதவி ஆணையர், EPFO அவர்களின் அலுவலக கணக்கிற்கு பெறப்பட்டதாக கடிதம் வரப்பெற்றது.

பின்னர், இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள் EPF எண் எடுத்து கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியதன் பேரில் 61 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தம் புதுப்பிக்கும் தருவாயில் 46 நபர்கள் EPF எண் எடுத்துள்ளனர். மீதமுள்ள 15 நபர்கள் (1. திரு. பி. ராயின் 2. திரு. பி. ரஹீம், 3. திரு. பி. அசரப், 4. திரு. பி. சலீம், 5. திரு. பி. ஹம்சா, 6. திரு. பி. ரஷீத், 7. ராயன் கன்ஸ்ட்ரக்சன், 8. திரு. முகமது பரூக், 9. திரு.நாரயணன், 10. திரு.சாகுல்ஹமீது, 11. திரு.இளையபெருமாள், 12. திரு.குட்டப்பன், 13.திரு.சுலைமான், 14. திரு.செல்லம் மற்றும் 15. திரு.விஸ்வகுமார்)ஆகியோர் மேற்படி காலத்திற்கான EPF எண் எடுக்கவில்லை (தற்பொழுது திரு.பி.ஹம்சா, திரு.செல்லம் மற்றும் திரு.விஸ்வகுமார் ஆகியோர் காலமாகிவிட்டார்கள்)

மேற்காணும் ஒப்பந்ததாரர்கள் உரிய விதிகளின்படி EPF கணக்கு தொடங்கி தொகையை செலுத்தாமையால் பொதுமக்களின் வாழ்வாதார அத்தியாவசிய பணிகளான குடிநீர், சாலைமேம்பாடு பணிகள், இதர அடிப்படை அத்தியாவசிய நிர்வாக செலவினங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய செலவினத்திற்காக நகராட்சி கணக்கில் இருப்பில் இருந்த ரூ.35,17,818/– நேரடியாக பாரத மாநில வங்கியிலிருந்து EPF அலுவகம் ஈடுசெய்துள்ளது.

எனவே, நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட EPF கணக்கு எடுக்காத 15 ஒப்பந்ததாரர்களின் Tender Deposit மற்றும் Security Deposit-லிருந்து ரூ.35,03,113/– மட்டும் 12.05.2022 அன்று அப்போது இருந்த நகராட்சி ஆணையர் நகராட்சி கணக்கிற்கு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்துள்ளார். மேலும், கையாடல் ஏதும் செய்யப்படவில்லை, மாற்றம் செய்யப்பட்ட தொகை உரிய EPF தலைப்பு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

| Sl. No | Contractor Name | Lapsed Register | Tender Deposit 2018-19 | Tender Deposit 2019-20 | Security Deposit 2018-19 | Security Deposit 2019-20 | Tender Deposit 2020-21 | Security Deposit 2020-21 | Grand Total | Audit Objection | Balance to be Paid |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | P.Rayin | 897901 | 30000 | 85000 | 12812 | 20267 | 0 | 0 | 1045980 | 0 | 1045980 |
| 2 | P.Asharaf | 198703 | 38530 | 135000 | 5000 | 0 | 55572 | 76431 | 509236 | 205853 | 303383 |
| 3 | P.Rahim | 107442 | 18530 | 172000 | 0 | 75000 | 35681 | 76703 | 485356 | 0 | 485356 |
| 4 | P.Saleem | 50194 | 26530 | 103000 | 0 | 0 | 56839 | 83347 | 319910 | 5000 | 314910 |
| 5 | P.Rasheed | 136120 | 0 | 106000 | 0 | 0 | 25000 | 0 | 267120 | 0 | 267120 |
| 6 | P.Hamsa (Death) | 62319 | 10330 | 94150 | 0 | 0 | 15000 | 0 | 181799 | 36612 | 145187 |
| 7 | Mohameed Farook | 0 | 30400 | 50500 | 90000 | 0 | 0 | 0 | 170900 | 0 | 170900 |
| 8 | Narayanan | 51910 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 51910 | 0 | 51910 |
| 9 | Shakul Hameed (Death) | 55500 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 55500 | 0 | 55500 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | Elayaperu-mal | 14000 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 14000 | 0 | 14000 |
| 11 | Kuttappan | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 12 | Suliman | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13 | Sellam (Death) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14 | Viswakumar (Death) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | P.Rayin Construction | 0 | 663572 | 0 | 0 | 0 | 0 | 0 | 663572 | 0 | 663572 |
| | Total | 1574089 | 817892 | 745650 | 107812 | 95267 | 188092 | 236481 | 3765283 | 247465 | 3517818 |
| 16 | Amma Unavagam EPF Recovery | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 14705 | 0 | 14705 |
| | Grand Total | 1574089 | 817892 | 745650 | 107812 | 95267 | 188092 | 236481 | 3779988 | 247465 | 3532523 |

இதில் வழக்கு தொடர்ந்த ஒப்பந்ததாரர் திரு. P. ராயன், ராயன் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி மற்றும் அவர் சார்ந்த அசோசியேட்ஸ் மொத்தம் 7 ஒப்பந்ததாரர்களிடம் மட்டும் ரூ.32,25,508/– Tender Deposit பதிவேட்டிலிருந்து கீழ்கண்ட தொகைகள் நகராட்சிக்கு வரவாக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| Sl. No. | Contractor Name | Lapsed Register | Tender Deposit 2018-2019 | Tender Deposit 2019-2020 | Security Deposit 2018-2019 | Security Deposit 2019-2020 | Tender Deposit 2020-2021 | Security Deposit 2020-2021 | Grand Total | Audit Objection | Balance to be paid |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | P.Rayin | 897901 | 30000 | 85000 | 12812 | 20267 | 0 | 0 | 1045980 | 0 | 1045980 |
| 2 | P.Asharaf | 198703 | 38530 | 135000 | 5000 | 0 | 55572 | 76431 | 509236 | 205853 | 303383 |
| 3 | P.Rahim | 107442 | 18530 | 172000 | 0 | 75000 | 35681 | 76703 | 485356 | 0 | 485356 |
| 4 | P.Saleem | 50194 | 26530 | 103000 | 0 | 0 | 56839 | 83347 | 319910 | 5000 | 314910 |
| 5 | P.Rasheed | 136120 | 0 | 106000 | 0 | 0 | 25000 | 0 | 267120 | 0 | 267120 |
| 6 | P.Hamsa (Death) | 62319 | 10330 | 94150 | 0 | 0 | 15000 | 0 | 181799 | 36612 | 145187 |
| 7 | P.Rayin Construction | 0 | 663572 | 0 | 0 | 0 | 0 | 0 | 663572 | 0 | 663572 |
| Total | | 1452679 | 787492 | 695150 | 17812 | 95267 | 188092 | 236481 | 3472973 | 247465 | 3225508 |

மேற்காணும் ஒப்பந்ததாரர்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவிப்புகளின்படி EPF கணக்கு துவக்கப்பட்டு 2016–ம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு முடிய EPF தொகை செலுத்தப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர்கள் EPF அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் வலியுறுத்தப்பட்டதன் பேரில் 2016–ம் ஆண்டு முதல் 2018–ம் ஆண்டு முடிய செய்யப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கு வழங்கப்பட்ட டெண்டர் அறிவிப்பில் தொழிலாளர்களுக்கு உரிய EPF தொகை செலுத்தப்படவில்லை என்பதால் 2018–ம் ஆண்டு முடிய அவர்களது டெபாசிட் தொகையில் இந்நகராட்சி நிர்வாகத்தால் பிடித்தம் செய்து விட்டதால், தற்பொழுது EPF கணக்கு துவங்கி 2019–ம் ஆண்டு முதல் 2023–ம் ஆண்டு முடிய அவரவர் செய்த ஒப்பந்தப்பணிக்கு தகுந்தாற்போல் EPF நிலுவைத் தொகை கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளனர். இதை கோயம்புத்தூர் EPF மண்டல உதவி ஆணையர் அலுவலகத்திலிருந்து உறுதி சான்று பெறப்பட்டுள்ளது.

1. திரு. P. ராயன் – ரூ.383139/–
2. திரு. P. சலீம் – ரூ.186643/–
3. திரு. P. ரசீது – ரூ.174089/–
4. திரு. P. அசரப் – ரூ.206870/–

--------

மொத்தம் – ரூ.950741/–

--------

மேற்கண்ட விவரங்கள் மாண்பமை முறை மன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

15) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், நெல்லியாளம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளரின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரரின் புகார் மனுவில் மனுதாரரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பல ஆண்டுகளாக நெல்லியாளம் நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களாக டெண்டர் பணிகளை தொடர்ந்து செய்து வருவதாகவும், ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் டெண்டரில் செலுத்திய EMD தொகையை நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம் டெண்டர் முடிந்தவுடன் தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு உடனடியாகவும் மற்றும் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு 'Preference Security Deposit என சொல்லக்கூடிய செயல்திறன் பாதுகாப்பு தொகையை செலுத்தியுடனும் உடனடியாக நகராட்சி நிர்வாகம் EMD தொகையை அந்தந்த ஒப்பந்ததாரர்களிடம் திருப்பி செலுத்திவிடுவர் எனவும், வேறு எந்த காரணத்திற்காகவும் EMD, Further Security Deposit (FSD) தொகையை பயன்படுத்தவோ, செலவிடவோ நகராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லையெனவும் தெரிவித்து, தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு சேர வேண்டிய சுமார் ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) –க்கும் மேலான EMD மற்றும் FSD தொகையை திரும்பப் பெற்றுத் தர வழிவகை செய்யுமாறு இம்முறைமன்றத்தில் முறையிட்டிருப்பது அறியமுடிகிறது.

மனுதாரர் திரு. P. ராயன், ராயன் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி மற்றும் அவர் சார்ந்த அசோசியேட்ஸ் மொத்தம் 7 ஒப்பந்ததாரர்களிடம் மட்டும் ரூ.32,25,508/– Tender Deposit பதிவேட்டிலிருந்து கீழ்கண்ட தொகைகள் நகராட்சிக்கு வரவாக்கப்பட்டுள்ளது என்றவிவரம் நெல்லியாளம் நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறியமுடிகிறது.

| Sl. No. | Contractor Name | Total (Tender Deposit and Security) Deposit) | Audit Objection | Balance to be paid |
|---|---|---|---|---|
| 1 | P.Rayin | 1045980 | 0 | 1045980 |
| 2 | P.Asharaf | 509236 | 205853 | 303383 |
| 3 | P.Rahim | 485356 | 0 | 485356 |
| 4 | P.Saleem | 319910 | 5000 | 314910 |
| 5 | P.Rasheed | 267120 | 0 | 267120 |
| 6 | P.Hamsa (Death) | 181799 | 36612 | 145187 |
| 7 | P.Rayin Construction | 663572 | 0 | 663572 |
| Total | | 3472973 | 247465 | 3225508 |

மேற்படி ஒப்பந்ததாரர்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவிப்புகளின்படி EPF கணக்கு துவக்கப்பட்டு 2016–ம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு முடிய EPF தொகை செலுத்தப்படவில்லை என்பதும், மேற்படி ஒப்பந்ததாரர்கள் EPF அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் வலியுறுத்தப்பட்டதன் பேரில் 2016–ம் ஆண்டு முதல் 2018–ம் ஆண்டு முடிய மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கு வழங்கப்பட்ட டெண்டர் அறிவிப்பில் தொழிலாளர்களுக்கு EPF–க்கான உரிய தொகை செலுத்தப்படவில்லை என்பதால் 2018–ஆம் ஆண்டு முடிய அவர்களது டெபாசிட் தொகையில் நகராட்சி நிர்வாகம் பிடித்தம் செய்து விட்டதால், தற்பொழுது EPF கணக்கு துவங்கி 2019–ம் ஆண்டு முதல் 2023–ம் ஆண்டு முடிய அவரவர் செய்த ஒப்பந்தப்பணிக்கு தகுந்தாற்போல் EPF நிலுவைத் தொகை ரூ.9,50,741/–செலுத்தியுள்ளதும், இது குறித்து கோயம்புத்தூர் EPF மண்டல உதவி ஆணையர் அலுவலகத்திலிருந்து உறுதி சான்று பெறப்பட்டுள்ளதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறியமுடிகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.20496/2021/எம்3, நாள் 02.03.2022 ல் வரிசை எண். 19–ல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பட்டியலுக்கான தொகையும், ஒப்பந்ததாரர்கள் தன்னுடைய பணியாளர்களுக்கு சேமநலநிதி (EPF) உரிய கணக்கில் செலுத்தி அதற்கான உரிய ரசீது வழங்கப்பட்டதை உறுதி செய்தபின் வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் EPF

தொகை செலுத்தாததால் ஏற்படும் அனைத்து வழக்குகள் மற்றும் இழப்பீட்டிற்கு நகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பொருள் குறித்து திரு. ராயன் என்பவர் (1) The Commissioner of Municipal Administration, Chennai (2) The Regional Director of Municipal Administration, Tiruppur (3) The Commissioner of Nelliyalam Municipality (4) Employees Provident Fund Organisation எதிர்மனுதாரர்களாக கொண்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P. No.786 of 2021 and W.M.P. Nos. 846 & 847 of 2021-ல் **29.06.2021** அன்று வங்கப்பட்ட தீர்ப்புரையில் பத்தி **10** மற்றும் **11** பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"10. In view of the notification of the Central Government and the directions of the Commissioner of Municipal Administration, the third respondent Municipality has incorporated the condition of 'EPF registered contractors alone can participate' as one of the conditions in the tender notification, which, this court, in view of the aforesaid decision, does not find fault with. Therefore, this Court is not inclined to interfere with the impugned tender notice.

11. In fine, this writ petition stand dismissed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed.".

இந்நேர்வில்,

The Employees' Provident Funds and Miscellaneous Provisions Act, 1952 (Act 19 of 1952) பிரிவு 8A (1)–ல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

8A. Recovery of moneys by employer and contractors.- (1) The amount of contribution (that is to say the employer's contribution as well as the employee's contribution in pursuance of any Scheme and the employer's contribution in pursuance of the Insurance Scheme), and any charges for meeting the cost of administering the Fund paid or payable by an employer in respect of an employee employed by or through a contractor may be recovered by such employer from the contractor, either by deduction from any amount payable to the contractor, under any contract or as a debt payable by the contractor.

The Employees' Provident Funds and Miscellaneous Provisions Act, 1952 (Act 19 of 1952) பிரிவு 8A (1)–ன்படி திரு. ராயன் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்த ஏழு ஒப்பந்ததாரர்களும் தங்களது பணியாளர்களுக்கு முறையாக வருங்கால வைப்பு நிதித் தொகை பிடித்தம் செய்யப்பட்டு நிர்வாக பங்குத் தொகையுடன் செலுத்தாத காரணத்தினால் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தின் மூலம் தொகை ரூ.32,25,508/–நகராட்சி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டதை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கவேண்டிய தொகையிலிருந்து ஈடு செய்து கொண்டது ஏற்புடையதே என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சேர வேண்டிய EMD மற்றும் FSD தொகை ரூ.50,00,000/–க்கும் அதிகமாக நகராட்சியில் நிலுவையாக உள்ளதை பெற்றுத்தர கேட்டுக்கொண்டுள்ள நிலையில், திரு. P. ராயன், ராயன் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி மற்றும் அவர் சார்ந்த அசோசியேட்ஸ் நிறுவனம் செலுத்த தவறியத் தொகை ரூ.35,17,818/– யை நகராட்சியின் வங்கி கணக்கிலிருந்து EPF அலுவகத்தினரால் எடுக்கப்பட்ட தொகையை நகராட்சிக்கு இழப்பு ஏற்படாதவாறு மனுதாரர் மற்றும் அவர் சார்ந்த 7 ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கவேண்டிய வைப்புத்தொகைகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ள தொகைக்கும், நகராட்சியினரால் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகைக்கும் உள்ள வித்தியாசத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மூலம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

நகராட்சி ஆணையர்கள் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலுக்கான தொகையும், ஒப்பந்ததாரர்கள் தன்னுடைய பணியாளர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) உரிய கணக்கில் செலுத்தி அதற்கான உரிய ரசீது வழங்கப்பட்டதை உறுதி செய்தபின் ஒப்பந்தப்பணிக்கான இறுதித் தொகை வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் EPF தொகை செலுத்தாததால் ஏற்படும் அனைத்து வழக்குகள் மற்றும் இழப்பீட்டிற்கும் நகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுவர் என நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சுற்றறிக்கை ந.க.எண்.20496/2021/எம்3, நாள் 02.03.2022–ன் வழி

அறிவுறுத்தப்பட்டுள்ளதை கருத்திற்கொள்ளாமல் நெல்லியாளம் நகராட்சி ஆணையர் செயல்பட்டுள்ளதாலும், நகராட்சி ஆணையர், முதன்மை வேலையளிப்பவர் (Principal Emloyer) என்ற நிலையில், ஒப்பந்ததாரர்கள் பணியாளர்களுக்கான வருங்கால வைப்புத் தொகை முறையாக செலுத்தப்பட்டு வருகிறதா என்பதை கண்காணிக்க தவறியதால் EPF அலுவலகத்தினரால் நகராட்சி கணக்கிலிருந்து தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே நெல்லியாளம் நகராட்சி வங்கி கணக்கிலிருந்து பெரும்தொகை ஒரே தவணையில் EPF அதிகாரிகளால் எடுக்க காரணமாக இருந்த நெல்லியாளம் நகராட்சி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் மீது துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 10–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. P. ராயன்,
   கதவு எண்.11/375, சங்கம்,
   சேரம்பாடி, நீலகிரி – 643 205,
   நீலகிரி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   நெல்லியாளம் நகராட்சி,
   நீலகிரி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருப்பூர்,

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

15/12/25
செயலாளர்.